**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-12-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-12-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-12-27 | 2023-12-28 | 2023-12-29 | 2023-12-30 | 2023-12-31 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 31.0 | 30.0 | 29.0 | 29.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 22.0 | 22.0 | 22.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 90 | 90 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 70 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 18 | 18 | 16 | 20 | 20 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 20 | 50 | 50 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 7 | 8 | 8 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரத்தில் இலேசானதூறல் மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 29.0°C - 31.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 21.0°C - 23.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 16 - 20 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

கறவை மாடுகளில் அடர்தீவனத்துடன் 50 கிராம் சோடியம் பை கார்பனேட் கலந்து கொடுப்பதன் மூலம் அமிலத்தன்மையை கட்டுப்படுத்தி கறவை திறனை அதிகப்படுத்தலாம்.

## குறுஞ்செய்தி :

பருவகால முன்னெச்சரிக்கையாக கோமாரி நோய் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | மக்காச்சோள பயிரைத் தாக்கும் குருத்து ஈ யை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மீன் இறைச்சிப் பொறியினை எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் அமைத்து குருத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | நிகழும் வானிலையை பயன்படுத்தி நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் பூக்கும் தருவாயில் உள்ள பயிர்களுக்கு TNAU நிலக்கடலை ரிச் 2கிலோ /ஏக்கர் மற்றும் 45 நாள் ஆனா நிலக்கடலை பயிருக்கு 400கிலோ /ஏக்கர் என்ற அளவில் ஜிப்சம் இடவேண்டும். |
| கரும்பு | தற்பொழுது நிலவி வரும் தட்பவெட்ப நிலையின் காரணமாக கரும்பு பயிரில் மாவு பூச்சியின் தாக்குதல் காணப்படுகிறது. இளஞ்சிவப்பு நிற மாவு பூச்சிகள் கரும்பின் வளர்ச்சியை குறைப்பதோடு வேரினையும் பாதிக்கும். ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் அல்லது வேப்பம்புண்ணாக்கு இடவேண்டும். டைமெத்தோயேட் 30EC என்ற பூச்சி கொல்லியை 1 லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி என்ற அளவில் கலந்து மாவுபூச்சி தென்படும் இடங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | நிகழும் வானிலையின் காரணமாக மரவள்ளிகழங்கில் மாவுப்பூச்சிதாக்கம் தெண்பட்டால் இதனை கட்டுப்படுத்த தையோடிகார்ப் 75 WP @ 5 கிராம்/லிட்டர் அல்லது அசிபேட் 75 SP 1 கிராம்/லிட்டர் தண்ணீரில் கலந்துதெளிக்க அறிவுறுத்தப்படுகிறது. |
| வாழை | கத்திரி பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான் சேதமடைந்த மற்றும் இறந்த செடிகளை சேகரித்து அழிக்கவும் ஹெக்டேருக்கு ஒரு விளக்குபொறி அமைத்து பூச்சிகளை சேகரித்து அழிக்கவும், எமாமெக்டின் பென்சோயேட் 0.5 கிராம் / லிட்டர் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | மழைக் காலங்களில் கொசுக்களின் உற்பத்தி அதிகமாக உள்ளதால் செம்மறி ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோயானது அதிகமாக பரவுகிறது இந்நோய் டிசம்பர் மாதத்திலும் அதன் தொடர்ச்சியாக பிப்ரவரி மாதம் வரையிலும் காணப்படும். நோயின் அறிகுறியாக அதிக காய்ச்சல் மற்றும் தீவனம் உண்ணாமல் சோர்ந்து காணப்படும். மூக்கில் உமிழ்நீர் மற்றும் வாய் உதடுகள் ஈறுகள் மற்றும் நாக்கில் சிறிய புண்கள் காணப்படும் ஆட்டின் முகம் சிவப்பாகவும், அதிகப்படியான இரத்த ஓட்டம் காரணமாக நாக்கு சிவப்பு நிறமாகவும் சில நேரங்களில் நாக்கு நீல நிறமாகவும் இருக்கும். நோய் அறிகுறிகள் கண்ட ஆடுகளுக்கு தனி கவனம் செலுத்தி கம்பு அரிசி கேழ்வரகு கஞ்சி போன்று நீர் ஆகாரமாக கொடுக்கப்பட்ட வேண்டும். நோய் கண்ட ஆடுகளை மேய்சலுக்கு அனுப்பகூடாது ஆடுகளை டெல்டாமெத்ரின் ( 2 மில்லி / 2லி தண்ணீர்) மருந்து கலந்த நீரில் மூழ்கி எடுக்க வேண்டும். உடனடியாக கால்நடை மருத்துவரை அணுகி, நோய் பாதித்த ஆடுகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்ட வேண்டும். |